View metadata, citation and similar papers at core.ac.uk

brought to you by CORE

provided by UUM Repository

| MediaTitle | Tamil Nesan | | |
|---|---|---|---|
| Date | 16 Jul 2014 | Language | Tamil |
| Circulation | 35,000 | Readership | 125,000 |
| Section | News | Color | Full Color |
| Page No | 1,14 | ArticleSize | 360 cm² |
| AdValue | RM 1,833 | PR Value | RM 5,498 |
| | | | |



# ம.இ.கா. தேர்தலில் முறைகேடுகள் சங்கப் பதிவு இலாகா விசாரணையா?

கோலாலம்பூர், ஜூலை 16-

கடந்த நவம்பர் 30ஆம் தேதி மலாக்காவில் ம.இ.கா. தேசிய பேராளர் மாநாட்டில் நடைபெற்ற தேர்தலில் முறைகேடுகள் நிகழ்ந்துள்ளதாக சங்கப் பதிவு இலாகா விசாரணை மேற்கொண்டு வருவதாக நம்பத்தகுந்த தகவல் கிடைத்துள்ளதாக தி மலேசியன் டைம்ஸ் இணையதள பதிவேடு கூறுகின்றது.

சங்கப் பதிவு இலாகாவைச் சேர்ந்த ஒரு குழு, ம.இ.கா. தேர்தல் நடவடிக்கைக் குழு உட்பட பல ம.இ.கா. உயர் மட்டத் தலைவர்களிடம் பல கோணங்களில் விசாரணையை மேற்கொண்டு வருவதாகத் தெரிகிறது.

14ஆம் பக்கம் பார்க்க...

## ம.இ.கா. தேர்தலில் முறைகேடுகள்...

இவ்விவகாரம் குறித்து சங்க பதிவு இலாகாவை தொடர்பு கொண்டபோது, மூத்த அதிகாரி ஒருவர் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதோடு ரகசியம் என்பதால் ஊடகங்களுக்கு தகவல்களை வெளியிட முடியாது எனக் கூறியதாக தி மலேசியன் டைம்ஸ் (டிஎம்டி) கூறுகிறது.

அதே வேளையில் சிலாங்கூர் கோத்தா ராஜா தொகுதி தேர்தலில் முறைகேடுகள் நடந்துள்ளதால், அத்தொகுதியின் நிலை குறித்து காரணம் கோரும் கடிதமொன்றை ம.இ.கா. தலைமையகத்திற்கு அனுப்பியுள்ளதாகவும் தெரிய வருகிறது. கட்சியின் உயர் மட்டத் தலைவர்களுடன் இவ்விவகாரம் குறித்து விவாதித்த பின்னரே ஊடகங்களுக்கு கருத்துரைக்க முடியுமென ம.இ.கா. பொதுச் செயலாளர் பிரகாஷ் ராவ் கூறியுள்ளார். இந்நிலையில் அத்தொகுதி முடக்கி வைக்கப் படலாம் அல்லது மறுதேர்தல் நடத்தப் படலாம் என அரசியல் பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

அத்தொகுதியில் மறுதேர்தல் நடைபெறுமேயானால், அத்தொகுதி பேராளர்கள் கடந்த தேசிய பேராளர் மாநாட்டில் நடைபெற்ற தேர்தலில் வாக்குப்பதிவு செய்துள்ளதால் அத்தேர்தலுக்கு பாதிப்பு ஏற்படலாம் எனக் கூறப்படுகிறது. அதனைத் தவிர்ப்பதற்கு ம.இ.கா. தலைமைத்துவம் பாதுகாப்பான நடவடிக்கையை மேற்கொள்ளும் என் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் சில ம.இ.கா. தலைவர்களும் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி கண்ட வேட்பாளர்களும், மலாக்காவில் நடைபெற்ற ம.இ.கா. உதவித் தலைவர்கள் மற்றும் மத்திய செயலவை உறுப்பினர்களுக்கான தேர்தல் ஜனநாயக முறைப்படி நடைபெறவில்லையென சங்க பதிவு இலாகாவில் புகார் கொடுத்திருந்தனர். இவ்விவகாரம் குறித்து கருத்துரைத்த அரசியல் ஆய்வாளர் ஒருவர், சங்க பதிவு இலாகா முறைகேடுகள் குறித்து கிடைத்த புகார்களை விசாரிப்பதற்கு அதிக காலம் எடுத்துக் கொண்டிருக்கக் கூடாது என்றும் விசாரணை முடிவு அறிக்கைகளை அவ்வப்போது வெளியிட்டிருந்தால் பல விவகாரங்களை தவிர்த்திருக்கலாம் என்றார். வடக்கு மலேசிய பல்கலைக்கழக அனைத்துலக கல்வியியல் இணைப் பேராசிரியர் டாக்டர் முகமட் அஸிசுடின் முகமட் சானி, இவ்விவகாரத்தில் சங்கப் பதிவு இலாகாவை குறை கூறுதல் முறையல்ல என்றார், மாறாக ம.இ.கா.வும் தனது கடமையை முறையாக செய்திருக்க வேண்டும் என்றார்.

மறுதேர்தல் நடத்துவதற்கு ம.இ.கா நினைத்திருந்தால் நிச்சயமாக சங்க பதிவு இலாகாவை அவர்கள் அணுகியிருப்பார்கள். இவ்விவகாரம் கட்சியின் சட்டவிதிகளுக்கு உட்பட்டது என்பதால் அனைத்து தரப்பினரும் விசாரணை வெற்றிகரமாக நடைபெறுவதற்கு முழு ஒத்துழைப்பினை வழங்கவேண்டும் என கேட்டுக் கொண்டார். ம.இ.கா. தலைமைத்துவமும் சங்க பதிவு இலாகா தனது விசாரணையை விரைவாக நடத்தி முடிக்க வலியுறுத்தவேண்டும் என்கிறார். அப்படி ஒருகால் சங்கப் பதிவு இலாகா மறுதேர்தல் நடத்தவேண்டும் என உத்தரவிட்டால் ம.இ.கா. தலைவர்கள் அவர்கள் மீது குறை கூறுவது தவறாகும். மறுதேர்தலை நடத்துவதா இல்லையா என்பது சங்கபு பதிவு இலாகா கையில்தான் இருக்கிறது என்றும் கூறுகிறார்.

Powered by: iSENTIA